www.kalvinews.com

Sl. No. :

**EO4HR**

பதிவு எண் | | | | | | | | | |

**2019**

# இந்துமதம், சைவமும் வைணவமும்
## (SSLC தரம்)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்டவற்றை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ

9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. **குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத் தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்த வித குறிப்புகளையும் செய்யக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
11. விண்ணப்பதாரர்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் 2-ல் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
12. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEAL

←

www.kalvinews.com

SPACE FOR ROUGH WORK

www.kalvinews.com

1. கீழ்க்கண்டவற்றில் அந்தக்கரணங்களில் சேராதது எது?

(A) மனம்
(B) பக்தி
(C) சித்தம்
(D) அகங்காரம்

2. புருடன் தத்துவத்தை சேர்ந்து சாங்கிய தத்துவங்களின் எண்ணிக்கை

(A) 24
(B) 25
(C) 26
(D) 27

3. நிஷ்காம்ய வினை —————— கொடுக்கும்.

(A) பக்தி
(B) சக்தி
(C) முத்தி
(D) காமியம்

4. சூன்ய கோட்பாட்டை வழங்கியவர்கள்

(A) சைவ சமயம்
(B) வைணவ சமயம்
(C) சமண சமயம்
(D) புத்த சமயம்

5. சாங்கிய தத்துவத்தை தோற்றுவித்தவர்

(A) ஜைமினி
(B) கபிலர்
(C) ரிஷப தேவர்
(D) புத்தர்

6. இன்பம் நுகர்வதே முத்தி என்று கூறும் சமயம்

(A) பௌத்தம்
(B) சமணம்
(C) சாருவாகம்
(D) சைவம்

7. கீழ்க்கண்டவர்களுள் வாசக தீக்கையோடு தொடர்பில்லாதவர் யார்?

(A) பட்டினத்தடிகள்
(B) மெய்கண்டார்
(C) நம்மாழ்வார்
(D) மதுரகவி ஆழ்வார்

www.kalvinews.com

8. முருகன், மறக்கருணையால் ஆட்கொண்டது யாரை?

(A) ஹம்சன்
(B) நரகாசூரன்
(C) மகாபலி
(D) சூரன்

9. முருக பெருமானின் மூன்றாவது கை ———————— ஐ செலுத்துகின்றது.

(A) வேல்
(B) வச்சிரம்
(C) அங்குசம்
(D) விசிகம்

10. பாண்டிய மன்னன் நெடுமாறனின் சுரநோயை தீர்த்தது யார்?

(A) திருஞானசம்பந்தர்
(B) மாணிக்கவாசகர்
(C) திருநாவுக்கரசர்
(D) சேந்தனார்

11. பொன்னம்பலத்தில் வீற்றிருக்கும் பெண் தெய்வமாக சேந்தனார் கூறுவது யாரை?

(A) துர்கா தேவி
(B) சரஸ்வதி தேவி
(C) உமா தேவி
(D) இலட்சுமி தேவி

12. இந்திரன் பவனிவரும் வாகனம் எது?

(A) ரிஷபம்
(B) சிங்கம்
(C) மயில்
(D) ஐராவதம்

13. கண்ணபிரான் கீதையில், "மாதங்களில் நான் ———————— மாதமாயிருக்கிறேன்", என அருளுகிறார்.

(A) கார்த்திகை
(B) மார்கழி
(C) தை
(D) மாசி

www.kalvinews.com

14. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | பத்தர் | 1. | ஞானிகள் |
| (b) | தொண்டர் | 2. | யோகிகள் |
| (c) | சாதகர் | 3. | கிரியை நெறியாளர் |
| (d) | சித்தர் | 4. | சரியை நெறியாளர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

15. 'அவதாரம்' என்பதன் பொருள்

(A) இறங்கி வருதல்
(B) நடத்தல்
(C) ஏறி செல்லுதல்
(D) அமர்தல்

16. "நானாவித உருவாய் நமையாள்வான்" என்று பாடியவர்

(A) திருமூலர்
(B) அப்பர்
(C) சுந்தரர்
(D) ஞான சம்பந்தர்

17. பத்தாம் திருமுறையாகக் கூறப்படுவது

(A) திருமந்திரம்
(B) திருவாசகம்
(C) தொல்காப்பியம்
(D) சிலப்பதிகாரம்

18. திருமுறைகளில் காணப்படும் அந்தாதிகள் எண்ணிக்கை

(A) 7
(B) 9
(C) 12
(D) 18

www.kalvinews.com

19. சமணத்தின் கூற்றுப்படி சரியாக பொருந்தியுள்ள இணையை தேர்ந்தெடுக்கவும்.

(A) சீவன் – அநாதி தன்மையற்றது

(B) சித்தன் – ஆசையால் கட்டுண்டவன்

(C) பெத்தன் – அருகக் கடவுள்

(D) முத்தன் – ஆசாபாசக் கட்டறுத்தவன்

20. பூஜை செய்பவரின் உடல் மற்றும் உளச் சுத்தத்தை —————— என்பர்.

(A) ஆத்தும சுத்தி

(B) திரவிய சுத்தி

(C) மந்திர சுத்தி

(D) இலிங்க சுத்தி

21. சோடசோப சாரங்கள் எத்தனை?

(A) 10

(B) 16

(C) 18

(D) 28

22. பூஜையின் வகைகள் எத்தனை?

(A) ஆத்மார்த்தம், பரார்த்தம்

(B) பரார்த்தம், ஆத்மார்த்தம், நைமித்திகம்

(C) நித்தியம், நைமித்திகம், காமிகம், ஆத்மார்த்தம்

(D) நித்தியம், நைமித்திகம், காமிகம், பரார்த்தம், மந்திரம்

23. சநாதன தர்மம் என அழைக்கப்படும் மதம் எது?

(A) சமண மதம்

(B) பௌத்த மதம்

(C) இந்து மதம்

(D) இஸ்லாம் மதம்

www.kalvinews.com

24. கீழ்க்கண்டவற்றுள் இறைவன் எடுக்குத் திருமேனிகளில் சேராதது எது?

(A) போகி
(B) யோகி
(C) மோகி
(D) வேகி

25. கன்னியாகுமரி பகவதியம்மனை கீழ்க்கண்டவாறு பாடியது யார்?

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று

நித்தம் தவம் செய்யும் குமரி"

(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) விவேகானந்தர்
(D) தேசிக விநாயகம் பிள்ளை

26. இலட்சுமி தேவியை, "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்", என்று பாடியவர் யார்?

(A) பொய்கையாழ்வார்
(B) பேயாழ்வார்
(C) ஆண்டாள்
(D) திருமங்கையாழ்வார்

27. சூரன் தன்னை —————— மர வடிவமாக மாற்றிக்கொண்டான்.

(A) வில்வ
(B) மா
(C) மூங்கில்
(D) வேம்பு

28. திருவாதிரையில் நடராஜரை வழிபட வேண்டும் என்றும் கூறும் ஆகமம் எது?

(A) காமிகாகமம்
(B) காரணாகமம்
(C) காரியாகமம்
(D) நித்யாகமம்

29. மந்திர ஜபமுறை —————— வகைப்படும்.

(A) 2
(B) 3
(C) 4
(D) 5

www.kalvinews.com

30. கீழ்க்கண்டவற்றுள் யோகத்தின் அங்கங்களில் சேராதது?

(A) இயமம்
(B) நியமம்
(C) நித்திரை
(D) ஆசனம்

31. 'பஞ்சாக்கரத்'தோடு தொடர்புடைய சமயம் எது?

(A) சைவம்
(B) வைணவம்
(C) சாக்தம்
(D) சௌரம்

32. 'ஐந்து கரத்தனை' எனத் துவங்கும் தோத்திர மாலை எத்தெய்வத்திற்கு உரியது?

(A) முருகன்
(B) விநாயகர்
(C) சிவன்
(D) விஷ்ணு

33. 'காதலாகிக் கசிந்து' எனத் துவங்கும் தோத்திர மாலை எத்தெய்வத்திற்கு உரியது?

(A) விநாயகர்
(B) முருகன்
(C) சிவன்
(D) விஷ்ணு

34. 'குனித்த புருவமும் கொவ்வைச்' எனத் துவங்கும் தோத்திர மாலை எத்தெய்வத்திற்குரியது?

(A) நடராஜர்
(B) சோமஸ்கந்தர்
(C) தட்சிணாமூர்த்தி
(D) சண்டேசுவரர்

35. 'பச்சைமா மலைபோல் மேனி' எனத் துவங்கும் தோத்திரமாலை எத்தெய்வத்திற்குரியது?

(A) விநாயகர்
(B) திருமால்
(C) சிவன்
(D) பிரம்மன்

36. கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலிருந்து கரையேறியவர்

(A) திருஞானசம்பந்தர்
(B) திருநாவுக்கரசர்
(C) திருநீலநக்கர்
(D) திருமூலர்

www.kalvinews.com

37. பொருத்துக :

(a) சங்கரர் முக்தி பெற்றது — 1. 15 ம் வயது

(b) இராமானுஜர் துறவு பூண்டது — 2. 9 ம் வயது

(c) மத்வாசாரியர் துறவு பூண்டது — 3. 32 ம் வயது

(d) இராமானுஜர் தமது வீட்டிலேயே எந்த வயதுவரை வேதம் பயின்றார் — 4. 18 ம் வயது

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

38. கீழ்க்கண்டவற்றுள் உலகத்தோற்றம் தொடர்பான சரியான விளக்க உரையை தேர்ந்தெடுக்கவும் :

I. எல்லா உலகங்களும் ஒரே காலத்தில் அழிவது மகாசங்காரம்

II. மகாசங்காரத்தில் பஞ்ச பூதங்களையும் மாயையையும் இறைவன் அழிக்கிறான்

III. உயிர்களின் அழுக்கைப் போக்க இறைவன் உலகை படைக்கிறான்

IV. இவ்வாறு இறைவன் உலகை படைத்து, காத்து அழித்து விளையாடி அருள் புரிகிறான்

(A) I, II மற்றும் III சரியானவை

(B) II, III மற்றும் IV சரியானவை

(C) I, III மற்றும் IV சரியானவை

(D) I, II மற்றும் IV சரியானவை

39. சாங்கியத்தின் கருத்துப்படி கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?

I. தத்துவம் இருபத்து மூன்றாகும். இருபத்து நான்காம் தத்துவம் புருடன்

II. இதனைத் தோற்றுவித்தவர் கபிலர்

III. புத்தியே அந்தக்கரணமாகும்

IV. புருடன் பெத்த நிலையிலும் முக்தி நிலையிலும் வெவ்வேறானது

(A) I மற்றும் II சரியானவை

(B) II மற்றும் IV சரியானவை

(C) III மற்றும் IV சரியானவை

(D) II மற்றும் III சரியானவை

www.kalvinews.com

40. ‘உள்ளம் பெருங்கோயில்’ எனும் பாடலை வழங்கியவர் யார்?

(A) திருமூலர் (B) திருத்தொண்டர்

(C) சுந்தரர் (D) அப்பர் பெருமான்

41. கோயில்கள் எதன் அடிப்படையில் நிர்மானம் செய்யப்படுகின்றன?

(A) ஆகமம் (B) உபநிடதம்

(C) வேதம் (D) புராணம்

42. ஆலயங்கள் எந்த வடிவில் அமைக்கப்பட்டிருக்கின்றன?

(A) கோபுரவடிவம் (B) ஓங்காரம்

(C) சதுரவடிவம் (D) மனித உடம்பு

43. பின்வருவனவற்றில் தவறான இணையைக் கண்டுபிடி :

I. முழங்கால் – ஆஸ்தான மண்டபம்

II. தொடை – நிருத்த மண்டபம்

III. வாய் – நந்தி மண்டபம்

IV. மூக்கு – ஸ்நபன மண்டபம்

(A) I (B) II

(C) III (D) IV

44. “மந்திரமாவது நீறு” என்ற பதிகத்தை பாடியவர்

(A) திருஞானசம்பந்தர் (B) திருநாவுக்கரசர்

(C) திருமூலர் (D) திருநீலநக்கர்

45. உடலிலுள்ள வெப்பத்தை நீக்கி குளிர்ச்சியை தருவது

(A) திருநீறு (B) சந்தனம்

(C) வில்வம் (D) ஜவ்வாது

www.kalvinews.com

46. அத்வைத மதத்தை ———————— என்றும் அழைப்பார்

(A) வேதாந்த மதம் (B) புத்த மதம்

(C) சமண மதம் (D) சீக்கிய மதம்

47. ''கண்ணால் யானும் கண்டேன் காண்க'' என்ற பாடலை பாடியவர்

(A) மாணிக்கவாசகர் (B) சம்பந்தர்

(C) அப்பர் (D) திருநாவுக்கரசர்

48. ஆன்மா பிறவிகள் தோறும் செய்த வினைகளின் நிலைக்களம் ———————— எனப்படும்.

(A) பிராரப்தம் (B) ஆகாமியம்

(C) சுப்ரபேதம் (D) சஞ்சிதம்

49. உயிர்வர்க்கத்தில் அண்டஜம் என்றால் என்ன?

(A) வேர்வையில் தோன்றுவன

(B) முட்டையில் தோன்றுவன

(C) கருப்பையில் தோன்றுவன

(D) தாவர இனங்கள்

50. உயிர்வர்க்கத் தோற்றங்களின் வகைகள் யாவை?

(A) மூன்று (B) நான்கு

(C) ஐந்து (D) ஏழு

51. உயிர்கள் செய்யக்கூடிய வினைகள் எத்தனை?

(A) இரண்டு (B) மூன்று

(C) நான்கு (D) எட்டு

www.kalvinews.com

52. கீழ்க்கண்டவற்றுள் உத்பிஜ்ஜம் வகையில் தோன்றாதது. எது?

(A) வேர்வை (B) வேர்

(C) கொடி (D) கொம்பு

53. சைவத்தில் மூன்று தீக்கைகளைப் பெற்றவர்கள் யார்?

(A) சைவ ஆசாரியர் (B) சமய குரவர்

(C) சந்தானாச்சாரியர் (D) நாயன்மார்கள்

54. சிவ திக்கையின் வகைகள் எத்தனை?

(A) 3 (B) 7

(C) 10 (D) 13

55. சிவபெருமானது மூன்று திருக்கண்களிலிருந்தும் பொழிந்த நீரில் தோன்றியதாக, சிவனடியார்கள் எண்ணுவது

(A) கங்கை (B) உருத்திராக்கம்

(C) திருநீர் (D) திருகைலாயம்

56. பிரளயாகலர் என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) ஒரு மலத்தால் கட்டுண்டவர்

(B) இரு மலத்தால் கட்டுண்டவர்

(C) மூன்று மலத்தால் கட்டுண்டவர்

(D) மலங்கள் அற்றவர்

57. பொருத்துக :

(a) சரியை 1. சாரூபம்

(b) கிரியை 2. சாயுஜ்ஜியம்

(c) யோகம் 3. சாலோகம்

(d) ஞானம் 4. சாமீபம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

www.kalvinews.com

58. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சன்மார்க்கம் | 1. | சாலோகம் |
| (b) | தாச மார்க்கம் | 2. | சாமீபம் |
| (c) | சக மார்க்கம் | 3. | சாயுச்சியம் |
| (d) | சத்புத்திர மார்க்கம் | 4. | சாரூபம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

59. ஆலய வழிபாட்டில் இறுதியாக வழிபட அமைக்கப்பட்டிருப்பது

(A) சண்டேசுவரர் (B) தட்சிணாமூர்த்தி

(C) முருகன் (D) லிங்கோத்பவர்

60. வள்ளி திருமணத் தத்துவத்தை கூறும் சிவஞானபோதம் ———————— ஆம் சூத்திரத்தில் உள்ளது.

(A) 2 (B) 4

(C) 6 (D) 8

61. வள்ளியும், தெய்வயானையும் யாருடைய புதல்விகள்?

(A) திருமால் (B) சிவன்

(C) பிரம்மா (D) லிங்கோத்பவர்

62. திருத்தொண்டத் தொகையின் பேருரையாய் நின்று விளங்கும் திருமுறை

(A) எட்டாம் திருமுறை

(B) பன்னிரண்டாம் திருமுறை

(C) பத்தாம் திருமுறை

(D) ஏழாம் திருமுறை

www.kalvinews.com

63. சைவசித்தாந்த முப்பொருள் உண்மையினை நூல் வாயிலாக போதிப்பதற்கு ———— தீக்கை என்று பெயர்.

(A) சாத்திர (B) யோக

(C) மாசை (D) வாசக

64. உயிர் உடலில் இருக்கும் போதே அடையும் முக்திக்கு ———— எனப் பெயர்.

(A) விதேக முக்தர் (B) ஜீவன் முக்தர்

(C) அனாதி முக்தர் (D) முக்தா முக்தர்

65. சைவ சித்தாந்தத்தில் இறைவனின் குணங்களாக ———— கூறப்படுகின்றன.

(A) 4 (B) 8

(C) 6 (D) 12

66. சைவ சமயத்தில் சாத்திரங்கள் என்று அழைக்கப்படுபவை

(A) 12 (B) 14

(C) 16 (D) 18

67. முதல் மூன்று சைவத் திருமுறையை எழுதியவர்

(A) சம்பந்தர் (B) சுந்தரர்

(C) மாணிக்கவாசகர் (D) திருமூலர்

68. பத்தாம் திருமுறையை இயற்றியவர்

(A) திருமூலர் (B) நம்பியாண்டார் நம்பி

(C) சேக்கிழார் (D) ஒட்டக்கூத்தர்

69. கீழ்க்கண்டவற்றுள் சுத்த மாயையோடு பொருந்தும் சரியான கூற்று எது?

I. சுத்தமாயை மல கன்மங்களோடு விரவும்

II. தன்னோடு சம்பந்தப்பட்ட ஆன்மாக்களுக்கு மயக்கத்தை மட்டுமே தரும்

III. மயங்காது நின்று பேரறிவையும் பேராற்றலையும் பெற உதவுவது

(A) I, II மற்றும் III சரியானது (B) I மற்றும் II சரியானது

(C) II மட்டும் சரியானது (D) III மட்டும் சரியானது

www.kalvinews.com

70. “ஒடுங்கி மலத்து உளதாம் ; அந்தம் ஆதி என்மனார் புலவர்” என்பது சிவஞானபோதத்தின் ———————— ஆகும்.

(A) முதற்சூத்திரம்
(B) இரண்டாம் சூத்திரம்
(C) மூன்றாம் சூத்திரம்
(D) நான்காம் சூத்திரம்

71. சிவனை முழு முதற் கடவுளாக கொண்டிருக்கும் சமயம் எது?

(A) சைவம்
(B) வைணவம்
(C) பௌத்தம்
(D) சமணம்

72. சிவம் எனும் சொல்லின் பொருள் யாது?

(A) வெண்மை
(B) செம்மை
(C) கருமை
(D) பசுமை

73. ‘சத்’ என்பதன் பொருள் யாது?

(A) இன்மை
(B) இறைவனின் பகுதி
(C) உள்ளது
(D) உலகம்

74. ‘அலுப்த சத்தி’ என்பதன் பொருள்

(A) இயற்கையுணர்வுடைமை
(B) பேரருள் உடைமை
(C) தூயவுடம்புடைமை
(D) முற்றறிவுடைமை

75. கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத இணை எது?

(A) தத்புருஷம் – மறைப்பு
(B) அகோரம் – காப்பு
(C) ஈசானம் – அருளல்
(D) சத்யோஜாதம் – படைப்பு

www.kalvinews.com

76. கீழ்க்கண்டவற்றுள் எந்த அதிகாரத்துப் பொருளை திருக்குறள் விரித்துக் கூறாமலேயே விட்டுவிடுகிறது?

(A) அவாவறுத்தல்

(B) மெய்யுணர்தல்

(C) துறவு

(D) நிலையாமை

77. "மூன்று மூர்த்தியுள் நின்றியலுந்தொழில் – மூன்றும் ஆயின மூவிலைச் சூலத்தான்" என்ற திருவாக்கினை எடுத்துரைத்தவர்

(A) சிவஞானசித்தியார்

(B) திருநாவுக்கரசர்

(C) திருமூலர்

(D) உமாபதி சிவம்

78. எல்லாப் பொருள்களிலும் உயிர்க்குயிராய் கலந்து, ஞானம்கிரியை என்னும் சக்திரூபமாய் நிற்கும் நிலை

(A) அதிகார நிலை

(B) இலய நிலை

(C) போக நிலை

(D) அதிசயன நிலை

79. உருவடிவம் ஒன்றனையே பொருள் என்று உணர்ந்து புறத்தொழில் அளவில் இயற்றப்படும் வழிபாடு ____________ எனப்படும்.

(A) கிரியை

(B) ஞானம்

(C) சரியை

(D) யோகம்

80. 'திருநீறு' அணிவதன் நோக்கம் யாது?

(A) உடல் தூய்மை பெற

(B) அழகு பெற

(C) அருள் பெற

(D) கருணை பெற

81. பாவை பாடிய வாயால் கோவை பாடியவர்

(A) திருமூலர்

(B) மாணிக்கவாசகர்

(C) சுந்தரர்

(D) தாயுமானவர்

www.kalvinews.com

82. பொருத்துக :

(a) வாலியோன் 1. கண்ணன்

(b) இராசசிம்மன் 2. மாயோன்

(c) இளவல் 3. நரசிம்மாவதாரம்

(d) முல்லைக் காவலன் 4. பலராமன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

83. வைணவத்தில் தத்துவத்திரயம் என்பது

(A) ரகசியங்கள்

(B) முப்பொருள் உண்மைகள்

(C) உண்மையற்றப் பொருட்கள்

(D) பிரஸ்தான பிரயங்கள்

84. தட்சிணாமூர்த்தியை "மௌன குரு" என்று அழைத்தது யார்?

(A) பிளாவட்சுகி அம்மையார்

(B) அன்னிபிரசன்டு அம்மையார்

(C) சுவாமி விவேகானந்தர்

(D) தயானந்த சரஸ்வதி

85. கீழ்கண்டவற்றுள் எது உயிர்களின் வகையைச் சாராதது?

(A) அணு

(B) நியாயம்

(C) ஆனந்தம்

(D) அமலம்

86. வைணவத்தில் தத்துவவாதம் என ———— உட்சமயங்கள் உண்டு

(A) 05

(B) 06

(C) 04

(D) 03

www.kalvinews.com

87. வைகானஸாகமம், யார் மூலமாக உபதேசிக்கப்பட்டது?

(A) விகனஸர்

(B) வியாசர்

(C) பெரியாழ்வார்

(D) திருப்பாணாழ்வார்

88. நம்மாழ்வாரின் பிறப்பிடம் எது?

(A) சிறுகாவூர்

(B) குருகூர்

(C) திருக்கோளூர்

(D) திருப்பூர்

89. திருமாலின் அன்ன அவதாரம் பற்றிய செய்தியைக் கூறுவது

(A) தொல்காப்பியம்

(B) பரிபாடல்

(C) கலித்தொகை

(D) விஷ்ணு புராணம்

90. தென்கலையார் ———————— மொழியிலுள்ள ஆழ்வாராதிகளின் வாக்குகளுக்குப் பெருமை கொடுப்பர்

(A) தமிழ்

(B) சமஸ்கிருதம்

(C) ஹிந்தி

(D) கன்னடம்

91. ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்தவர் யார்?

(A) ராமானுஜர்

(B) ஆளவந்தார்

(C) நாதமுனிகள்

(D) கூரத்தாழ்வார்

92. இராமானுஜர் கூறும் தத்துவத்தின் பெயர் என்ன?

(A) துவைதம்

(B) அத்வைதம்

(C) விசிட்டாத்வைதம்

(D) சித்தாந்தம்

93. கீழ்க்கண்டவற்றுள் திருமங்கையாழ்வார் அருளிச் செய்யாத பிரபந்தம் எது?

(A) சிறிய திருமடல்

(B) திருநெடுந்தாண்டகம்

(C) சிறிய திருமொழி

(D) பெரிய திருமொழி

www.kalvinews.com

94. முதல் திருவந்தாதியை பாடியவர் யார்?
(A) பூதத்தாழ்வார்
(B) பொய்கை ஆழ்வார்
(C) பேயாழ்வார்
(D) நம்மாழ்வார்

95. முதல் மூன்று திருமொழியில் ———— கோயிலை பற்றி பாடியுள்ளார்.
(A) திருநாங்கூர்
(B) விற்றுவன் கோட்டை
(C) திருவேங்கடம்
(D) திருவரங்கம்

96. சிவவாக்கியார் என்ற இயற்பெயர் கொண்ட ஆழ்வார் யார்?
(A) திருமழிசை ஆழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) திருமங்கை ஆழ்வார்
(D) திருப்பானாழ்வார்

97. ஆண்டாளின் வளர்ப்பு தந்தை யார்?
(A) திருமங்கையாழ்வார்
(B) குலசேகராழ்வார்
(C) பெரியாழ்வார்
(D) பேயாழ்வார்

98. திருமங்கையாழ்வார் புதையல் கண்டெடுத்த நதி
(A) காவிரி
(B) வெண்ணாறு
(C) வேகவதி
(D) முடிகொண்டான்

99. குலசேகராழ்வார் ஐந்தாம் திருமொழியில் பாடிய பொருள் யாது?
(A) திருவரங்கம் பெரிய கோயில்
(B) திருவேங்கடம்
(C) இராமாயணக் கதைச் சுருக்கம்
(D) விற்றுவக் கோட்டை

100. கருடாழ்வாரின் பெற்றோர் யாவர்?
(A) காரி-உடையநங்கை
(B) தாயின் வயிற்றில் பிறவாதவர்
(C) முகுந்தர்-பதுமை
(D) எவருமில்லை

101. கீழ்க்கண்டவற்றுள் இராமனுஜரால் எழுதப்படாத நூல் எது?
(A) வேதாந்த தீபம்
(B) வேதாந்த வர்த்திகம்
(C) வேதாந்த சாரம்
(D) வேதாந்த சங்கிரகம்

www.kalvinews.com

102. மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளியது ———————— திருமுறை ஆகும்.

(A) 4 ஆம்
(B) 8 ஆம்
(C) 6 ஆம்
(D) 10 ஆம்

103. திருமந்திரத்தை அருளியது யார்?

(A) திருஞானசம்பந்தர்
(B) திருநாவுக்கரசர்
(C) திருமாளிகையார்
(D) திருமூலர்

104. அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றை கூறுவது ———————— ஆம் திருமுறை.

(A) 8 ஆம் திருமுறை
(B) 9 ஆம் திருமுறை
(C) 10 ஆம் திருமுறை
(D) 12 ஆம் திருமுறை

105. தட்சிணாமூர்த்தி தனது ஒரு திருவடியால் யாரை மிதித்துக் கொண்டிருக்கிறார்?

(A) நரகாசூரன்
(B) முயலகன்
(C) பத்மாசூரன்
(D) ஹம்சன்

106. எல்லா உயிரிகளையும் ஒரு காலத்தில் ஓய்வு படுத்துதல் ———————— எனப்படும்.

(A) மகாசங்காரம்
(B) சம்ஹாரம்
(C) சராயுஜம்
(D) சுவேதஜம்

107. 'ருத்' என்பதன் பொருள்

(A) ஆனந்தம்
(B) உறக்கம்
(C) துக்கம்
(D) திசை

108. கோயிலில் தலைமை பலிபீடம் அமைந்துள்ள இடம்

(A) நந்திதேவருக்கு முன்
(B) கருவறை உள்ளே
(C) கோபுரத்திற்கு வெளியே
(D) நந்திதேவருக்குப்பின்

www.kalvinews.com

109. "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" எனும் நம்மாழ்வார் விடையால் சித்தந்தெளிந்த ————————, இந்த ————————க்கு சான்றாவார்.

(A) மெய்கண்டார், ஸ்பரிச தீக்கை

(B) மதுரகவி ஆழ்வார், வாசக தீக்கை

(C) அருணந்தி சிவாச்சாரியார், மந்திர தீக்கை

(D) பெரியாழ்வார், ஔத்திரி தீக்கை

110. பொருத்துக :

| பஞ்ச பூதங்கள் | | கோயில் அமைந்துள்ள இடங்கள் | |
|---|---|---|---|
| (a) | பிருதிவி | 1. | திருவானைக்கா |
| (b) | அப்பு | 2. | திருக்காளத்தி |
| (c) | தேயு | 3. | திருவாரூர் |
| (d) | வாயு | 4. | சிதம்பரம் |
| (e) | ஆகாயம் | 5. | திருவண்ணாமலை |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 3 | 5 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 5 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 5 | 2 | 4 |
| (D) | 2 | 3 | 1 | 4 | 5 |

111. நடராஜரின் தாமிரசபை அமைந்துள்ள ஊர்

(A) சிதம்பரம்

(B) குற்றாலம்

(C) திருவாலங்காடு

(D) திருநெல்வேலி

112. குறிஞ்சி நில கடவுள் யார்?

(A) சிவன்

(B) வருணன்

(C) முருகன்

(D) இந்திரன்

www.kalvinews.com

113. உமாதேவி, திருஞானசம்பந்தருக்கு திருமுலைபால் ஊட்டிய ஸ்தலம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

(A) திருச்சிராப்பள்ளி
(B) கடலூர்
(C) கன்னியாகுமரி
(D) நாகப்பட்டினம்

114. இறைவனது ஐந்தொழிலை வரிசை கிரமத்தில் உள்ளதை தேர்ந்தெடுக்கவும்

(A) ஆக்கல், அழித்தல், அளித்தல், மறைத்தல், அருளல்
(B) ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல்
(C) ஆக்கல், அளித்தல், மறைத்தல், அழித்தல், அருளல்
(D) ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல், மறைத்தல்

115. இயற்கை சீற்றத்தால் அழிந்து போன கோயில்களை புதுப்பித்தலை எவ்வாறு அழைப்பர்?

(A) அநாவர்த்தம்
(B) ஆவர்த்தம்
(C) புனராவர்த்தம்
(D) அந்தரிதம்

116. சாக்தேய ஆகமங்களின் எண்ணிக்கை

(A) 69
(B) 67
(C) 64
(D) 62

117. பிம்பசுத்தி என்பது

(A) விக்கிரகம் புதிதாக செய்தல்
(B) விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்தல்
(C) விக்கிரகத்தை வழிபடுதல்
(D) விக்கிரகத்தை சுத்தம் செய்தல்

www.kalvinews.com

118. கு + ர் + உ = குரு. இதில் உள்ள 'உ'கரம் குறிக்கும் பொருள்

(A) பாபத்தைத் தகிப்பிக்கும் தீ

(B) சித்தியைக் கொடுப்பவன்

(C) சிவன்

(D) உலகை உணர்த்துபவன்

119. கீழ்க்கண்டவற்றுள் யோகத்திற்கும் ஞானத்திற்கும் உரிய தீக்கை எது?

(A) விசேட தீக்கை

(B) நிர்வாண தீக்கை

(C) சமய தீக்கை

(D) நயன தீக்கை

120. கீழ்க்கண்டவற்றுள் ஏழு வகை தீக்கையில் இடம்பெறாதது எது?

(A) ஒளத்திரி

(B) நயனம்

(C) வசியகம்

(D) மானதம்

121. ஹிந்து என்பதன் பொருள்

(A) மகிழ்ச்சியில் துய்க்கின்றவன்

(B) ஹிம்சையில் துய்க்கின்றவன்

(C) ஹிம்சை இல்லாதவன்

(D) பக்தி இல்லாதவன்

122. சமணத்தின் கூற்றுப்படி சரியான வரிசைக் கிரமத்தில் அமைந்ததை தேர்ந்தெடுக்கவும்.

(A) ஆச்சிரவம், நிர்ச்சரம், பந்தம், சமுவரம், வீடு

(B) ஆச்சிரவம், சமுவரம், நிர்ச்சரம், பந்தம், வீடு

(C) ஆச்சிரவம், சமுவரம், பந்தம், நிர்ச்சரம், வீடு

(D) ஆச்சிரவம், நிர்ச்சரம், சமுவரம், பந்தம், வீடு

123. கீழ்க்கண்டவற்றுள் புத்த மதப் பிரிவு அல்லாதது எது?

(A) வைபாடிகம்

(B) சௌத்திரபாஷிகம்

(C) யோகசாரம்

(D) மாத்தியமிகம்

www.kalvinews.com

124. பொருத்துக :

(a) கழுத்து 1. பலிபீடம்

(b) தொப்புள் 2. ஆஸ்தான மண்டபம்

(c) தொடை 3. அர்த்த மண்டபம்

(d) முழங்கால் 4. நிருத்த மண்டபம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

125. மனிதனுடைய சிரம் கோயிலின் கர்ப்பக்கிரகத்துடன் ஒப்பிடப்படுகிறது. இந்த சிரத்திலுள்ள இரு செவிகளில் வலது செவி ——————— கடவுளையும், இடது செவி ——————— கடவுளையும் உணர்த்துகிறது.

(A) சண்டிகேசுவரர், தட்சிணாமூர்த்தி

(B) நந்தி, இலிங்கம்

(C) நடராஜர், சண்டிகேசுவரர்

(D) தட்சிணாமூர்த்தி, சண்டிகேசுவரர்

126. மூன்று பிரகாரங்களையுடைய கோயில்கள் உணர்த்தும் கோசங்கள்

(A) அன்னமயம், பிராணமயம், விஞ்ஞானமயம்

(B) அன்னமயம், மனோமயம், ஆனந்தமயம்

(C) அன்னமயம், பிராணமயம், மனோமயம்

(D) அன்னமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம்

127. ஆலய நிர்மாணங்களின் வகைகள் ——————— ஆகும்.

(A) 8 (B) 6

(C) 4 (D) 2

128. கீழ்க்கண்டவற்றில் அட்டபந்தன பொருட்களில் சேராதது எது?

(A) குங்கிலியம் (B) கொம்பரக்கு

(C) செம்பஞ்சு (D) அக்கான்

www.kalvinews.com

129. எந்த வகையான ஜபமுறை உத்தமம் என்று சொல்லப்படுகிறது?

(A) மந்தம்
(B) வாசகம்
(C) மானஸம்
(D) பேதனம்

130. இம்மை மறுமைப் பயன் அளிக்கும் பஞ்சாக்கரம் எது?

(A) சூட்சம
(B) காரண
(C) ஸ்தூல
(D) மகாமநு

131. சிவமேயாக்கும் பயனை கொடுக்கும் பஞ்சாக்கரம்

(A) ஸ்தூல
(B) சூட்சம
(C) காரண
(D) மகாமநு

132. சங்கரர் அவதரித்த இடம்

(A) காலடி
(B) சிதம்பரம்
(C) திருச்சி
(D) தஞ்சாவூர்

133. இராமானுஜர் ——————— ஆம் ஆண்டு அவதரித்தார்.

(A) 1010
(B) 1015
(C) 1016
(D) 1017

134. மத்வாசாரியரின் குரு ——————— ஆவர்.

(A) அச்சுதப்பிரகாசம்
(B) சங்கரர்
(C) இராமானுஜர்
(D) நீலகண்ட சிவாசாரியார்

135. வைசேடிக பிரமாண அளவைகள் எத்தனை?

(A) 4
(B) 6
(C) 8
(D) 10

136. நியாய தத்துவத்தை இயற்றியவர்

(A) அக்கபாதரர்
(B) கணாதர்
(C) பதஞ்சலி
(D) சங்கரர்

www.kalvinews.com

137. அத்வைதத்தோடு பொருந்தாத கூற்றை தேர்ந்தெடுக்கவும்.

I. பிரம்மம் என்ற ஒன்று மட்டுமே உண்மை.

II. ஜீவர்களும் பிரம்மமும் வேறானவை.

III. பாசக்கட்டுகளால் பிரம்மத்தை உணராமல் இருக்கிறோம்.

IV. பக்தியினால் அஞ்ஞானம் விலகி முக்திநிலை அடையலாம்.

(A) I, III மற்றும் IV

(B) III மட்டும்

(C) I மற்றும் IV

(D) II மற்றும் IV

138. மத்வாசாரியார் தனது ———————— வயதிலேயே ———————— என்பாரின் சீடராகி துறவியானார்.

(A) ஏழாவது, பெரியநம்பி

(B) எட்டாவது, சிவப்பிரகாசர்

(C) ஒன்பதாவது, அச்சுதப்பிரகாசர்

(D) பத்தாவது, கௌடபாதர்

139. கீழ்க்கண்டவற்றுள் துவைதத்தோடு பொருந்தாத கருத்து எது?

(A) பிரபஞ்சமும், பரமாத்மாவும், ஜீவாத்மாவும் வேறு வேறானவை

(B) ஜீவாத்மாக்களுக்கு ஜனன, மரணம் இல்லை

(C) உலகம் ஒரு தோற்றமல்ல, உண்மையானதே

(D) சுதந்திரம் இறைவன் ஒருவனுக்கே உள்ளது

140. இராமானுஜரின் கருத்துப்படி, பரப்பிரமம் என்பது ———————— மற்றும் சித்து, அசித்து என்பவை ———————— ஆகும்.

(A) சரீரம், சரீரி

(B) சரீரி, சரீரம்

(C) சரீரி, துரீரம்

(D) சரீரம், துரீரி

141. ரிக் வேதத்தில் ———————— முதல் ———————— மண்டலங்களில் இறைவனை அக்கினி என்ற பெயரால் பாடப்படுள்ளது

(A) ஒன்று, ஐந்து

(B) ஒன்று, ஆறு

(C) ஒன்று, ஏழு

(D) ஒன்று, எட்டு

www.kalvinews.com

142. தர்சனங்கள் ———————— வகைப்படும்

(A) 10
(B) 8
(C) 6
(D) 4

143. பதஞ்சலி முனிவர், இருபத்தாறாம் தத்துவமாக விளங்குவது எது என்று கூறுகிறார்?

(A) உலகம்
(B) ஆன்மா
(C) இறைவன்
(D) உலகம் மற்றும் ஆன்மா

144. மத்வாசாரியர் ———————— என்ற கிராமத்தில் அவதரித்தார்

(A) காலடி
(B) அநந்தேசுவர
(C) ஸ்ரீரங்கம்
(D) திருநகரி

145. ''..... பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே'' என தந்தைக்கு கடவுளை சுட்டிக்காட்டியவர் யார்?

(A) சம்பந்தர்
(B) சுந்தரர்
(C) மாணிக்கவாசகர்
(D) திருமூலர்

146. 'பசிதம்' என்றால் என்ன?

(A) விபூதி
(B) உருத்திராக்கம்
(C) கண்டிகை
(D) லிங்கம்

147. 'ஆலயம்' என்பதன் பொருள் யாது?

(A) பெருங்கோயில்
(B) ஆன்மா லயிக்கும் இடம்
(C) சரீரம்
(D) தங்குமிடம்

www.kalvinews.com

148. இராமகிருஷ்ணரின் அகோரப்பசியை நீக்க வைத்தியம் செய்தது யார்?

(A) பைரவி பிராம்மணி

(B) விவேகானந்தர்

(C) பாம்பன் சுவாமிகள்

(D) தபஸ்யானந்தர்

149. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | படைத்தல் | 1. | அநுக்கிரகம் |
| (b) | காத்தல் | 2. | திரோபவம் |
| (c) | அழித்தல் | 3. | ஸம்ஹாரம் |
| (d) | மறைத்தல் | 4. | ஸ்திதி |
| (e) | அருளல் | 5. | சிருட்டி |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 4 | 5 | 3 | 2 | 1 |
| (B) | 5 | 3 | 2 | 4 | 1 |
| (C) | 5 | 3 | 1 | 4 | 2 |
| (D) | 5 | 4 | 3 | 2 | 1 |

150. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | அருவம் | 1. | ரூபம் |
| (b) | அருவுருவம் | 2. | அரூபம் |
| (c) | உருவம் | 3. | ரூபாரூபம் |

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 3 |
| (D) | 1 | 3 | 2 |

www.kalvinews.com

151. பிறப்புக்கள் எத்தனை வகைப்படும்?

(A) 3
(B) 5
(C) 7
(D) 9

152. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | செம்மை | 1. | தாமசம் |
| (b) | கருமை | 2. | சத்துவம் |
| (c) | வெண்மை | 3. | இராஜசம் |

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 1 |
| (D) | 3 | 1 | 2 |

153. பொருத்துக :

| | தோற்றம் | | உயிர் வகை |
|---|---|---|---|
| (a) | அண்டஜம் | 1. | கொடி |
| (b) | சுவேதஜம் | 2. | விலங்கு |
| (c) | உத்பிஜ்ஜம் | 3. | பறவை |
| (d) | சராயுஜம் | 4. | கிருமி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

154. கருப்பையில் தோன்றும் உயிர்வர்க்கத்தை ———————— என்பர்.

(A) அண்டஜம்
(B) சுவேதஜம்
(C) உத்பிஜ்ஜம்
(D) சராயுஜம்

www.kalvinews.com

155. சேத்திர வெண்பாவை எழுதியவர்?

(A) நக்கிர தேவநாயனார்

(B) பட்டினத்தடிகள்

(C) ஐயடிகள் காடவர்கோன்

(D) சேரமான் பெருமான்

156. உருத்திராக்கம் என்றால் என்ன?

(A) சம்சார துக்கத்தை தீர்ப்பது

(B) முப்பிறவி பயனை அடைவது

(C) நிகழ்கால பயனை அடைவது

(D) எதிர்கால பயனை அடைவது

157. கோயில் எனும் வார்த்தையில் 'கோ' என்பதன் பொருள் யாது?

(A) இறைவன்

(B) உயிர்

(C) உலகம்

(D) வினை

158. 'யானே நீ என் உடைமையும் நீயே' என்று கூறியவர்

(A) நம்மாழ்வார்

(B) பெரியாழ்வார்

(C) திருமழிசையாழ்வார்

(D) திருமங்கையாழ்வார்

159. சின்முத்திரையில் நடுவிரல் எதை குறிக்கும்?

(A) ஆணவம்

(B) கன்மம்

(C) மாயை

(D) ஆன்மா

www.kalvinews.com

160. திருத்தொண்டர் புராணம் கி.பி. 3ம் நூற்றாண்டு முதல் ———— வரை உள்ள தமிழ்நாட்டின் வரலாற்றை அறிய உதவும் வரலாற்று மூலமாகும்.

(A) கி.பி. 9 ம் நூற்றாண்டு

(B) கி.பி. 10 ம் நூற்றாண்டு

(C) கி.பி. 11 ம் நூற்றாண்டு

(D) கி.பி. 12 ம் நூற்றாண்டு

161. பின்வருவனவற்றில் எது உயிரை உணர்த்துகிறது?

(A) முருகன்

(B) சிங்கம்

(C) பலிபீடம்

(D) எதுவுமில்லை

162. கீழ்க்கண்டவற்றுள் இறைவனின் எண்குணங்களில் உள்ளடங்காதது எது?

(A) வரம்பில் இன்பமுடைமை

(B) பேரருள் உடைமை

(C) பிறவயமுடைமை

(D) இயல்பாகவே பாசங்களின் நீங்கி நிற்றல்

163. கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருந்தியுள்ள இணை எது?

(A) சகலர் – ஆணவம் மட்டும் உடையோர்

(B) விஞ்ஞானகலர் – மாயை, கன்மம் உடையோர்

(C) விஞ்ஞானகலர் – ஆணவம், கன்மம், மாயை உடையோர்

(D) பிரளயாகலர் – ஆணவம், கன்மம் உடையோர்

www.kalvinews.com

164. கார்த்தவீரியார்ஜீன்னை விஷ்ணு எந்த அவதாரத்தில் கொன்றார்?

(A) பரசுராமாவதாரம்

(B) மச்சாவதாரம்

(C) கூர்மாவதாரம்

(D) வராகாவதாரம்

165. “பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே” எனும் திருவாசகப் பாடலில் உள்ள ‘பாரித்தல்’ என்பதன் பொருள்

(A) வளர்த்தல்

(B) அழித்தல்

(C) தேய்வுறச் செய்தல்

(D) படைத்தல்

166. கீழ்க்கண்டவற்றுள் திருவாசகத்தின் கூற்று எது?

(A) நின்றனவும் சரிப்பனவும் சைவமேயாம்

(B) இருமொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர்

(C) பெண்ணாண் அலியெனும் பெற்றியன் காண்க

(D) அந்தம் ஆதி என்மனார் புலவர்

167. திருஞானசம்பந்தர் “நின்றனவும் சரிப்பனவும் சைவமேயாம்” என்று கூறி அருளிய இடம் எது?

(A) திருவாலூர்

(B) திருவரங்கம்

(C) திருச்சேறை

(D) திருத்தெளிச்சேரி

www.kalvinews.com

168. திருவள்ளுவரும், பரிமேலழகரும் முதல்வனாகிய இறைவனுக்கு ______ குணங்களை கூறுகின்றனர்.

(A) ஆறு
(B) ஏழு
(C) எட்டு
(D) ஒன்பது

169. பொருத்துக :

(a) திரோபவம் — 1. அருளல்
(b) திதி — 2. அழித்தல்
(c) சங்காரம் — 3. மறைத்தல்
(d) அனுக்கிரகம் — 4. காத்தல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

170. சைவ வழிபாட்டில் சந்தனம் அணிவதன் நோக்கம் யாது?

(A) அருளை அளிக்கும்
(B) கருணை கிடைக்கும்
(C) இறை இன்பம் கிட்டும்
(D) உடல் குளிர்ச்சி பெறும்

171. சைவ அடியவர்கள் வழிபாட்டின் போது திலகம் அணிவதன் நோக்கம் யாது?

(A) சிவனது நெற்றிக் கண்ணை நினைவூட்டல்
(B) முக்தி பெறல்
(C) இறையின்பம் பெறல்
(D) மலம் நீக்கல்

172. சைவ சமயக் கிளைகளின் எண்ணிக்கை

(A) 5
(B) 6
(C) 7
(D) 8

www.kalvinews.com

173. கீழ்க்கண்டவற்றுள் நம்பியாண்டார் நம்பியுடன் தொடர்புடைய சரியான கூற்று எது?

I. இராசராசசோழன் வேண்டுகோளின் படி தேவாரத் திருமுறை ஏடுகளைத் திருமுறைகளாக வகுத்தருளினார்.

II. தேவாரத் திருமுறை ஏடுகளை திருவாதவூரில் கண்டெடுத்தார்

III. திருத்தொண்டர் திருவந்தாதி எனும் பிரபந்தத்தை செய்தருளினார்

(A) II மற்றும் III சரியானது
(B) II மட்டும் சரியானது
(C) I மற்றும் III சரியானது
(D) I, II மற்றும் III சரியானது

174. பன்னிரு ஆசிரியர்கள் அருளிச் செய்த 11வது திருமுறையில் உள்ள பிரபந்தங்களின் எண்ணிக்கை

(A) 38
(B) 40
(C) 42
(D) 44

175. சைவ ஆச்சாரியர்களின் முதன்மையான ஒழுக்க நெறி எது?

(A) சிவ சின்னங்கள் அணிதல்
(B) உடல் தூய்மை
(C) ஆலய வழிபாடு
(D) தீட்சை பெறல்

176. திருக்குறுந்தாண்டகம் என்ற பிரபந்தத்தை அருளிச் செய்தவர்

(A) திருமங்கையாழ்வார்
(B) மதுரகவியாழ்வார்
(C) குலசேகரயாழ்வார்
(D) திருப்பாணாழ்வார்

177. தர்மபூத ஞானம் எதனுடைய குணமாக அறியப்படுகிறது?

(A) இறைவன்
(B) ஆன்மா
(C) உலகம்
(D) எதுவுமில்லை

178. திருவாய்மொழியை அருளியது யார்?

(A) குலசேகராழ்வார்
(B) பெரியாழ்வார்
(C) திருமங்கை ஆழ்வார்
(D) நம்மாழ்வார்

179. “மாம் ஏகம் சரணம் வ்ரஜ” என்பது

(A) அஷ்டாச்சர மந்திரம்
(B) துவய மந்திரம்
(C) சரம ஸ்லோகம்
(D) காயத்ரி மந்திரம்

www.kalvinews.com

180. இரண்டாம் திருவந்தாதியை பாடியவர்

(A) பேயாழ்வார்

(B) திருமழிசை ஆழ்வார்

(C) நம்மாழ்வார்

(D) பூதத்தாழ்வார்

181. திருமாலை பாட்டுக்குரிய பொருளாகக் கொண்ட சங்க இலக்கியத்தினைக் குறிப்பிடுக

(A) சிலப்பதிகாரம்

(B) பரிபாடல்

(C) திருமுருகாற்றுப்படை

(D) எதுவுமில்லை

182. 'புள்ளணி நீள்கொடிச் செல்வன்' என்னும் உவமையால் குறிக்கப்படுபவர்

(A) திருமால்

(B) இந்திரன்

(C) வருணன்

(D) முருகன்

183. சிறந்த பாகவதனாகத் திகழ்ந்த கிரேக்க நாட்டு தூதுவன் யார்?

(A) மெகஸ்தனிஸ்

(B) ஹெலியோ தொரர்

(C) பெர்ணாண்டஸ்

(D) எவருமில்லை

184. பின்வரும் இணைகளில் எது சரி?

I. நாதமுனிகள் — யோக ரகசியம்

II. ஆளவந்தார் — வேதார்த்த சங்கிரகம்

III. இராமாநுசர் — கீதார்த்த சங்கிரகம்

(A) I மட்டும்

(B) II மட்டும்

(C) III மட்டும்

(D) II மற்றும் III

185. இராமனால் கொல்லப்பட்ட பெண்

(A) கைகேயி

(B) தாடகை

(C) வாசுகி

(D) இராதா

www.kalvinews.com

186. விசிஷ்டாத்வைதத்தில் பொதிந்துள்ள 'விசேஷம்' என்பதன் பொருள்

(A) சித்து, அசித்து, பிரமம் ஆகியவை வெவ்வேறானவை

(B) பிரமம் மட்டுமே உண்மை. சித்து, அசித்து பொய்த்தோற்றம்

(C) சித்து, அசித்து, பிரமம் ஆகிய மூன்றும் ஒரு பொருளும் அதன் குணமும் போல் சேர்ந்துள்ளன

(D) சித்து, அசித்து, பிரமம் இவைகளுக்கு ஜன மரணமுண்டு

187. இராமானுஜரின் கருத்துப்படி 'அப்ரதக்சித்தி' என்பதன் பொருள்

(A) பிரிக்க கூடிய தன்மையுடையது

(B) கண்களுக்கு புலப்படாத சக்தி

(C) உள்ளார்ந்த பிரிக்க இயலாத தன்மையுடையது

(D) உள்ளார்ந்த கர்ம சக்தி

188. இராமனின் குரு யார்?

(A) வால்மீகி

(B) விசுவாமித்திரர்

(C) வசிஷ்டர்

(D) எவருமில்லை

189. சயனம் என்பதன் பொருள்

(A) நடத்தல்

(B) அமர்தல்

(C) படுத்தல்

(D) ஓடுதல்

190. நம்மாழ்வாரை, "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்ற பாசுரத்தால் துதித்தவர்

(A) திருமழிசை ஆழ்வார்

(B) மதுரகவி ஆழ்வார்

(C) பேயாழ்வார்

(D) பூதத்தாழ்வார்

191. இராமாயணக் கதைச் சுருக்கத்தை ———— ஆம் திருமொழியில் பாடியுள்ளார்.

(A) 12

(B) 10

(C) 08

(D) 06

192. கீழ்க்கண்டவர்களுள் திருமாலின் கருட அம்சத்தில் அவதரித்தவர் யார்?

(A) பூதத்தாழ்வார்

(B) மதுரகவியாழ்வார்

(C) திருமங்கையாழ்வார்

(D) பெரியாழ்வார்

www.kalvinews.com

193. 'திருவாசிரியம்' எனும் பிரபந்தத்தை அருளிச் செய்தவர்

(A) பெரியாழ்வார்
(B) திருப்பாணாழ்வார்
(C) மதுரகவியாழ்வார்
(D) நம்மாழ்வார்

194. வேயர்குலத்தில் ஆனி சுவாதியில் கருடாம்சராய் அவதரித்தவர்

(A) அன்பர்தாள்தூளி
(B) நற்பாணன்
(C) துய்யபட்ட நாதன்
(D) சேரலர்கோன்

195. சைவ சமயமே நற்சமயம் என்று எண்ணி, "சிவவாக்கியர்" என்னும் பெயர் பூண்ட ஆழ்வார்,

(A) பெரியாழ்வார்
(B) திருப்பாணாழ்வார்
(C) திருமங்கையாழ்வார்
(D) திருமழிசையாழ்வார்

196. "நாராயணா என்னாத நாவென்ன நாவே" என்று குறிப்பிடுபவர்

(A) நம்மாழ்வார்
(B) திருமங்கையாழ்வார்
(C) திருப்பாணாழ்வார்
(D) இளங்கோவடிகள்

197. 'மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரம்' என்று கூறியவர்

(A) கம்பர்
(B) இளங்கோவடிகள்
(C) பெரியாழ்வார்
(D) ஆண்டாள்

198. அனந்தாழ்வார் என அழைக்கப்படுபவர்

(A) பொய்கையாழ்வார்
(B) குலசேகர ஆழ்வார்
(C) மதுரகவியாழ்வார்
(D) ஆதிசேடன்

199. கீழ்க்கண்டவற்றுள் நம்மாழ்வாரின் பிரபந்தம் அல்லாதது எது?

(A) திருவாசிரியம்
(B) பெரிய திருவந்தாதி
(C) சிறிய திருமடல்
(D) திருவிருத்தம்

200. பெரியாழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்கள்

(A) திருமாலை, பெரியாழ்வார் திருமொழி
(B) பெருமாள் திருமொழி, சிறிய திருமடல்
(C) பெரிய திருமொழி, திருமாலை
(D) திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி

---

www.kalvinews.com

SPACE FOR ROUGH WORK

www.kalvinews.com

SPACE FOR ROUGH WORK

www.kalvinews.com

SPACE FOR ROUGH WORK

SEAL